

FREE EDITION

March - 2018

# ஜோதி

# Jothi
Spiritual Newsletter

ஜோதி 12 : சுடர் 01 - 133

## ஆன்மிகச் செய்திச்சுடர்

**மூல மந்திரம்**

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

**ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களின்**

**78ஆவது**

**அவதாரத் திருநாள்**

**03.03.2018**



**ஆன்மிக குருவின் பாதம் பணிந்து அருள் ஆசி வேண்டும் செவ்வாடை சக்திகள்**

**"அடிகளார் பிறந்த நாளின்போது, பாதபூசை செய்து பாதங்களில் வைக்கப்பட்ட குங்குமத்தை எடுத்து நெற்றியில் வைத்துக்கொள்ளுங்கள்"**
**– அன்னையின் அருள்வாக்கு**

# "ஒரு சித்தரை உயிர்ப்பித்த அடிகளார்"

### ஒட்டன் சத்திரத்தில் ஒரு சித்த புருஷர்

ஒட்டன் சத்திரம் எனும் ஊரில், திண்டுக்கல்-பழனி சாலையில் ஒரு கடை ஓரத்தில் அமர்ந்து, நோட்டுப் புத்தகத்தில் பேனாவினால் ஆங்கிலத்தில் ஏதாவது எழுதிக்கொண்டிருந்த ஒரு சித்த புருஷர் இராமசாமி.

அஷ்டமா சித்திகள் கைவரப் பெற்றவர், அழுக்கான உடையணிந்த தோற்றம், பைத்தியக்காரனைப் போன்ற பேச்சு.

### ஆசி பெற வந்த ஒரு பிராமணப் பெண்மணி

ஒரு முறை திருமதி இராசம்மாள் சங்கரன் என்ற அம்மையார், சுவாமிகளைப் பார்ப்பதற்கு முதன்முதலாக வந்தார். அவர் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். சுவாமி அமர்ந்திருந்த கடைக்கு அருகில் வந்து, ஆசீர்வதிக்கணும் சாமி! எனக் கீழே விழுந்து வணங்கினார்.

"வா! வா! உன்னைத்தான் எதிர்பார்த்தேன். போயி அந்த கடையிலே பிரியாணி ஒரு பொட்டலம் வாங்கி வா! போ! போ!" என சுவாமி உத்தரவிட்டார்.

**சக்தி பேராசிரியர் கண்ணன்** M.A., Ph.D..
திருபுவனம் - தஞ்சை மாவட்டம்

பிராமணர் குலத்தைச் சேர்ந்த அந்த அம்மையார், அசைவ ஓட்டலுக்குச் சென்று, பிரியாணி வாங்கி வரத் தயங்கினார்.

"அதெல்லாம் முடியாது நீதான் போய் வாங்கி வர வேண்டும்" எனச் சுவாமி அதட்டினார்.

வேறு வழியில்லாமல் அவர் குறிப்பிட்ட பிரியாணிக் கடைக்குச் சென்று, காசு கொடுத்து அந்த அம்மையாரே தன் கைப்பட அதனை வாங்கி வந்தார்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

**"இயற்கை வழிபாடு, சக்தி வழிபாடு, தாய்,தந்தை வழிபாடு, என்ற வழிபாட்டு உணர்ச்சி வளர்ந்தால்தான் உனக்கு நல்ல வழிகாட்டியாகத் தெய்வம் அமையும்".**
**– அன்னையின் அருள்வாக்கு**

அன்னையின் அருள்வாக்கு:

**"உடலுக்கு வேலை கொடுப்பதும் ஆன்மாதான். ஆசையை உற்பத்தி செய்வதும் ஆன்மாதான்".**

## "ஜோதி"
- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான 'சக்தி ஒளி' மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக "ஜோதி" ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: "Jothi Sudar"**

## செய்திச்சுடரில்...


ஒரு சித்தரை உயிர்ப்பித்த அடிகளார்
Page: 1 – 5

உயிரைக் காத்த கலச தீர்த்தம்
Page: 6 - 7

UPCOMING EVENTS
Melbourne: 10, 11, 15
Sydney: 5, 8

திருமதி அம்மா பதில்கள்
பக்கம்: 10

குடும்பநல வேள்வியில் கிடைத்த அனுபவம்
பக்கம்: 14

Divine Miracles
Page: 9

சித்தர்பீட விழாக்கள்
பக்கம்: 07

ஆன்மிக நாட்குறிப்பு
பக்கம்: 16


## "ஒரு சித்தரை ...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

அவர் முகத்திலோ அருவருப்பின் சாயல்! "இந்தாங்க சாமி! சாப்பிடுங்கோ!" எனப் பொட்டலத்தைக் கொடுக்கப் போனார் அந்த அம்மையார்.

### கண்களைத் திற!

உடனே சுவாமி, "இரு! இரு! பொட்டலத்தை நீயே பிரி!" என உத்தரவிட்டார்.

அந்த அம்மையார், மனம் மிகவும் சஞ்சலப்பட்டுப் பொட்டலத்தைத் தன் கண்களை மூடிக்கொண்டு அருவெறுப்போடு பிரித்தார்.

"சீக்கிரம் பொட்டலத்தைப் பிரி! பிரித்து ஒரு கை எடு!" என்றார் சாமி!

அந்த அம்மையாரும் பொட்டலத்தைப் பிரித்து உள்ளே கைவிட்டு ஒரு கவளம் எடுத்தார். "சீக்கிரம்! அதை நீயே சாப்பிடு!" என்றார் சாமி!

"கண்களைத் திற!" என்றார். கண்ணில் நீர் மல்க, அந்த அம்மையார் தன் கைகளைப் பார்த்தார்! நெய் மணக்கும் சர்க்கரைப் பொங்கல்! பொட்டலத்தில் வெதுவெதுப்பான நெய் ததும்பும் சர்க்கரைப் பொங்கல்! – அதிர்ந்து போனார் அந்த அம்மையார்!

சுவாமிகளின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார். சுவாமிகள் புன்னகை செய்தார்.

தனது கைகளால் அந்த அம்மையாருக்கு ஆசீர்வாதம் செய்தார்.

சுவாமிகளின் சித்தாடலுக்கு இது ஒரு எடுத்துக்காட்டு!

### ஒரு பொலிஸ் அதிகாரியின் அனுபவம்

காவல்துறையில் அதிகாரியாகப் பணியாற்றியவர் ஒருவர்.

இவருக்குச் சுவாமியைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் இருந்தது. மிகவும் கண்டிப்பான அதிகாரி அவர்.

ஒருநாள் ஜீப்பில் ஏறிக்கொண்டு, துணையாக ஒரு தலைமைக் காவலரையும் அழைத்துக்கொண்டு ஒட்டன் சத்திரம் சென்றார்.

சுவாமிகள் அமர்ந்திருந்த கடைக்கு எதிரே, ஜீப்பை நிறுத்திவிட்டு, உடன் வந்த காவலரை அழைத்து, "அதோ! அந்தக் கடையின் எதிரே யாரோ ஒரு சித்தர் இருக்கிறாராம். அவர் இருக்கிறாரா என்று பார்த்துவிட்டு வா!" என அனுப்பினார்.

அந்தக் காவலரும் அதிகாரியின் உத்தரவை ஏற்று, சுவாமிகளிடம் சென்று, "சாமி! எங்கள் அதிகாரி வந்திருக்கிறார். உங்களைப் பார்க்கணுமாம்!" எனக் கூறினார்.

உடனே சாமி, "தொப்பியைக் கழட்டிடுவேன்! போயி அவனை வரச் சொல்லுடா! அவனுக்கு நீ ஆளா.? போடா! போ!" என விரட்டினார்.

பயந்துபோன காவலர், ஓடிப்போய், அதிகாரியிடம் விவரம் சொன்னார். உடனே அவர் விழுந்தடித்துக்கொண்டு சாமியிடம் ஓடி வந்தார்.

உடனே சாமி, "என்னடா..?
அதிகார மமதையா..? உன்னோட தொப்பியைக் கழட்டிப் புடுவேண்டா! ஒழுங்கா இரு!" என்றார் சாமி!

(தொடர்ச்சி...3ஆம் பக்கம்)

# "ஒரு சித்தரை ...

(2ஆம் பக்க தொடர்ச்சி)

அந்த அதிகாரி வெலவெலத்துப்போனார். அவரிடம் யாரும் அதுவரை அப்படிப் பேசியதில்லை.

"உன் தொப்பியைக் கழட்டிக் கக்கத்திலே வைடா!" என்றார். அவரும் அவ்வாறே செய்தார்.

"போயி அந்தக் கடையிலே டீ வாங்கிட்டு வாடா!" என்றார் சாமி.

உடனே அவர் காவலரிடம் கூறி டீ வாங்கிவரச் சொன்னார்.

"ஏய் நீ போய் வாங்கிட்டு வாடான்னா, அவனை அனுப்பறே..? நீ போய் வாங்கிட்டு வாடா!" என்றார் சாமி!

அந்த அதிகாரி ஏதோ மந்திரத்திற்குக் கட்டுண்டவர் போலத் தானே நடந்து சென்று ஒரு டீயை வாங்கிக்கொண்டு வந்தார் சாமியிடம் நீட்டினார்.

சாமி, அதிகாரியைப் பார்த்து நீ குடிடா! உனக்குத் தாண்டா வாங்கி வரச் சொன்னேன் எனக் கூறி, அவரை டீ குடிக்கச் சொல்லி, அவரது தலையைத் தொட்டு ஆசிர்வாதம் செய்து, "நீ நல்லா இருப்பே..! போடா போ!" என அனுப்பினார்.

அதிகார ஆதிக்கத்தையும் ஆணவத்தையும் அறவே வெறுப்பவர் சுவாமிகள், பண்புடைமையே அவரை உணர உரிய வழியாகும்.

## விதியை மாற்ற முயலும் சித்தர்கள்

சித்தர்கள் சில நேரங்களில் மனிதர்களின் விதியை மாற்ற முயற்சிக்கிறார்கள். மனிதன் அதற்கு இடம் கொடுக்காத பொழுது, அவன் விதி வழியே செல்லுமாறு விட்டு விடுகிறார்கள்.

முக்காலமும் உணர்ந்த சித்தர்களுக்குத்தான் அடுத்த நிமிடம் என்ன நடக்கும் என்பது தெரியும். நாமெல்லாம் மானுடப்பிறவிகள், நம்மால் அதைப் புரிந்து கொள்ள இயலாது.

## நானும் என் மனைவியும் சாமியைத் தரிசிக்கச் சென்றது

ஒரு முறை நானும் என்னுடைய மனைவி, குழந்தைகள் இருவர் ஆகிய நால்வரும் சாமியைத் தரிசிக்கச் சென்றோம்.

"சாமி! வணக்கம் சாமி!" என்றேன்.

போடா! போயி அஞ்சு டீ வாங்கிவிட்டு வாடா! என்றார். வாங்கி வந்தேன். எங்கள் நால்வருக்கும் நான்கு டீயைக் கொடுத்துக் குடிக்கச் சொன்னார். அவர் ஒரு டீயைக் குடித்தார்.

## பட்சி பறக்கப் போவுதடா!

பிறகு, "ஏண்டா பாதையை மறைக்கிற..? அடுத்த சனிக்கிழமை பட்சி பறக்கப் போவுதடா? போயி சோமசுந்தரம் வீட்லே ரசம் வாங்கிட்டு வாடா! குடிக்கணும்" என்றார்.

நான் ஓடிச் சென்று சோமசுந்தரம் ஐயா வீட்டிலிருந்து ரசம் வாங்கிக் கொடுத்தேன் குடித்தார்.

"போடா! போ! போ!" என்றார் நாங்கள் வீட்டிற்குத் திரும்பி விட்டோம்.

## சமாதி ஆகிவிட்டார்

அடுத்த வாரம் சனிக்கிழமை காலை தவத்திரு தங்கவேலு சுவாமிகளிடமிருந்து எனக்கு அழைப்பு வந்தது. உடனே வருமாறு ஒரு ஆள் வந்து சொன்னான். உடனே புறப்பட்டுப்போனேன்.

ஒட்டன் சத்திரம் சித்தர் சமாதி ஆகிவிட்டார். இப்பொழுதுதான் அங்கிருந்து போன் வந்தது என்றார் சுவாமிகள.

எனக்குப் பெருந்துக்கமும் அழுகையும் வந்தது. உடனே வீடட்டிற்கு வந்து என் மனைவியை அழைத்துக்கொண்டு ஒட்டன் சத்திரம் சென்றேன். சுவாமிகளின் உடலைப் பார்த்து அழுதேன். யாருக்கும் தீங்கு செய்யாத மகாத்மா அவர்! அவரால் யாருக்கும் எந்தத் தொந்தரவும் கிடையாது.

## அம்மாவிடம் குருநாதரிடமும் வேண்டினேன்

அம்மா மேல்மருவத்தூர் தாயே! சித்தர் மரபில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர் இராமசாமி சித்தர்! அவரால் சமுதாயத்திற்கு நன்மைகள் பலப்பல!

குருபிரானே! அந்தச் சித்தர் ஏன் இவ்வளவு சீக்கிரம் இந்த உலகத்தை விட்டுச் செல்ல வேண்டும்? என என் மனம் கிடந்து புலம்பியது.

(தொடர்ச்சி..4ஆம் பக்கம்)

## "ஒரு சித்தரை ...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

### சமாதி வைக்க ஏற்பாடுகள்

சாமிகள் சமாதி வைப்பதற்கான ஏற்பாடுகளை அன்பர்கள் செய்ய ஆரம்பித்தனர். ஒட்டன்சத்திரம் பிரமுகர் A.P. பழனியப்பன் அவர்கள், நாகனம்பட்டி செல்லும் வழியில் தீயணைப்பு நிலையத்தை ஒட்டிச் சமாதிக்கு இடம் ஏற்பாடு செய்து கொடுத்தார்.

சிங்கம் புணரியிலிருந்து ஏதோ அலுவலாக ஒட்டன் சத்திரம் வந்த புலவர் அ.பாண்டியன் அவர்களும் செய்தி கேட்டு சுவாமிகளுக்கு அஞ்சலி செலுத்த வந்துவிட்டார்.

### சமாதிக் குழிக்குள் அடிகளார் வந்தது எப்படி?

அலங்கரிக்கப்பட்ட வண்டியில் இறுதி ஊர்வலம் புறப்பட்டுச் சமாதி இடத்தை அடைந்தது.

சமாதிக் குழிக்குள் நான் இறங்கிக் கொண்டேன். மற்றொரு மூலையில் புலவர் பாண்டியன் இறங்கிக் கொண்டார்.

விபூதி, உப்பு எல்லாம் போட்டு சுவாமிகளின் உடலை மேலேயிருந்து கீழே இறக்கி உட்கார வைத்தோம். ஒரே கூட்டமாக இருந்தது.

புலவர் பாண்டியனை யாரோ அந்தப் பக்கமாகத் தள்ளிவிட்டார்கள். என்னையும் மற்றொரு திசையில் தள்ளினார்கள். யார் என்று பக்கத்தில் பார்த்தேன். அதிர்ச்சி அடைந்தேன். ஆம்! சாமியின் தலைமாட்டில் நம் அருள்திரு அடிகளார் அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

சுவாமிகளின் தலையை மேலிருந்து கீழாக மூன்று முறை தடவினார்கள்.

"பூட்டு திறந்தாச்சுடா! உனக்குக் காத்து வந்திருச்சுடா! நடடா! நட!" என்று கூறிவிட்டு, தன் காலினால் சுவாமிகளின் காலை ஒரு தட்டு தட்டிவிட்டு உடனே அடிகளார் மறைந்துவிட்டார்கள்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. நான் வாங்கிச் சென்றிருந்த செவ்வாடைத் துண்டை சுவாமிகளின் முகத்தில் மூடி சமாதியை நிறைவு செய்து, மண் போட்டு மூடி, மேலே மண்ணால் மெழுகினோம். மணி இரவு 10.30 மெயின் ரோட்டிற்கு வந்து சேரும்பொழுது 11.00ஆகிவிட்டது.

### சமாதி வைக்கப்பட்ட சாமி நடந்து சென்று கொண்டிருந்தார்

அதன் பிறகு பஸ்ஸில் ஏறி நானும், என் மனைவியும் பழனிக்குச் செல்ல உட்கார்ந்தோம். பஸ்ஸில் முன் வாசல் அருகே உள்ள சீட்டில் நாங்கள் இருவரும் அமர்ந்து இருந்தோம்.

ஒட்டன் சத்திரத்திலிருந்து பஸ் புறப்பட்டு விருப்பாட்சி மேட்டில் மெதுவாகச் சென்று கொண்டிருந்தது.

மிக மேடாக இருக்கும் பகுதி அது. ஆதலால் பஸ் மிகவும் ஊர்ந்துதான் செல்லும்.

நானும் எனது மனைவியும் ஜன்னல் வழியாக ரோட்டைப் பார்த்தோம்.

அப்பொழுதுதான் சமாதி வைக்கப்பட்ட சுவாமிகள் விருப்பாட்சி மேட்டில் நடந்து சென்று கொண்டிருந்தார். "சாமி! சாமி!" என்று கத்தினோம். பஸ்ஸில் இருந்தவர்கள் வேடிக்கை பார்த்தார்கள்.

நான் கடைசியாகப் போர்த்திய செவ்வாடையைத் தோளில் போட்டுக்கொண்டு சுவாமிகள் மேட்டில் நடந்து சென்று கொண்டிருந்தார்.

என் கண்களில் கண்ணீர் ஆறாகப் பெருகியது.

அருள்திரு அடிகளார் அவர்களின் அருட்கருணையால்தான் இராமசாமி சித்தர் உயிர் பெற்றார். மாண்டவரை உயிர்ப்பிக்கும் ஆற்றல் எல்லாம் வல்ல சித்தர்கட்கெல்லாம் சித்தராகிய அருள்திரு அடிகளாரிடம் உண்டு என்பதை உணர்ந்துகொண்டேன்.

### சமாதியில் வெடிப்பு இருக்கிறதா? பாருங்கள்!


நாங்கள் இரவு 1.30 மணி அளவில் பழனிக்கு வந்து சேர்ந்தோம்.

(தொடர்ச்சி..5ஆம் பக்கம்)

# Sydney - Mandrams - Upcoming Events – March 2018



**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**
**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**
Contact: 02-97643872, 0416217317



**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**

Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 02.03.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |

**ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களின்**
**78ஆவது**
**அவதாரத் திருநாள் பெருவிழா**
**09.03.2018**
**7.30pm -9.30pm**



| | | | |
|---|---|---|---|
| 16.03.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 23.03.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 30.03.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 31.03.2018 | SATURDAY – சனி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |

## “ஒரு சித்தரை ...

(4ஆம் பக்க தொடர்ச்சி)

காலையில் எழுந்தவுடன் பழனி தவத்திரு தங்கவேலு சாமிகளிடம், இரவு சித்தர் உயிருடன் விருப்பாட்சி மேட்டில் நடந்து சென்ற அதிசயத்தைக் கூறினேன். சுவாமிகள் வியந்து போனார்.

“அவர் சொன்னார் உடனடியாக நீங்கள் சமாதி வைத்த இடத்திற்குச் செல்லுங்கள்! சமாதி தலை மாட்டில் நீளமாக வெடிப்பு ஏற்பட்டிருந்தால், அந்தச் சமாதியிலிருந்து உயிர் பெற்று, வெளியே சென்றுவிட்டார் என்று பொருள்.”

நான் உடனடியாகப் புறப்பட்டுச் சமாதிக்குச் சென்றேன். சமாதியின் தலை மாட்டில் நீளமான வெடிப்பு இருந்தது. உயிர் பெற்ற சித்தர் சமாதியிலிருந்து வெளியேறிவிட்டார்! அம்மா! தாயே! ஆதிபராசக்தியே! உனது கருணையே கருணை!

அருள்திரு அடிகளார் அவர்களின் அளப்பரிய சக்தியை அறிந்து கொள்வதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு எடுத்துக் காட்டாகும்.

21 ஆண்டுகளுக்கு முன்னால் (சுமார் 1997) நடந்த இந்த உண்மைச் சம்பவம் நம் சக்திகள் அனைவருக்கும் தெரிய வேண்டும் என்று கருதியே இதனை எழுதியுள்ளேன்.

ஓம் சக்தி!

# உயிரைக் காத்த கலச தீர்த்தம்

- இசைமணி -

“மகனே எத்தனை குற்றத்தையும் மன்னிப்பேன். என்னாலும் மன்னிக்க முடியாத குற்றம் ஒன்று உண்டு. அது என்ன தெரியுமா? அகங்காரம் - அகம்பாவம்! அகம்பாவத்தை அழித்து விடுவேன்”- என்பது அன்னையின் அருள்வாக்கு.

அன்னையின் கருணை இரு வகைப்படும். 1. அறக்கருணை 2. மறக்கருணை. அரக்கரை அழித்து அருள்பாலிப்பது அவள் மறக்கருணை. அடியார்க்கு இரங்கி நெகிழ்ந்து அருள்பாலிப்பது அறக்கருணை.

பழனியில் உள்ள கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி வருபவர் சக்தி கண்ணன். அவரும் மனைவியும் அன்னையின் தீவிர பக்தர்கள். அயராமல் பணிபுரியும் தொண்டர்கள்.

பேராசிரியர் கண்ணன் அவர்களுடைய ஒரே தம்பி திரு. சேகர். அண்ணனுக்கு மாறுபட்ட போக்குடையவர். நாத்தழுக்க நாத்திகம் பேசி வந்தவர். தெருவில் செல்லும் செவ்வாடைத் தொண்டர்களையும், வழிபாட்டிற்குச் செல்கின்ற பக்தர்களையும் கேலியும் கிண்டலும் செய்து வருபவர். யாராவது அன்னையின் டாலரை அணிந்திருந்தால் அதனைக் கழற்றித் தூக்கி எறிவார்.

தம்பியின் போக்கு கண்டு சக்தி. கண்ணன் வேதனைப்படுவார். இளமைத்துடுக்கு, போகச் சரியாகி விடுவான். உரிய காலம் வரும்போது அன்னை இவனை எப்படியும் திருத்தி விடுவாள் என்று எண்ணிக் கொள்வார்.

தம்பி சேகர் ஒரு நாள் மோட்டார் சைக்கிளில் பழனிக்கு அருகில் வேகமாகச் சென்று கொண்டிருந்தார். அவர் எதிரே பாரம் ஏற்றிய லாரி ஒன்று வந்து கொண்டிருந்தது. அந்த லாரியுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் சேகரின் மண்டை உடைந்து, கை கால் எலும்பெல்லாம் முறிந்து உடம்பெல்லாம் காயங்கள் ஏற்பட்டு, உணர்வற்ற நிலையில் திண்டுக்கல் பாதையில் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். உடனே கண்ணன் அவர்களுக்கும் உறவினர்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

பழனி அரசு மருத்துவமனைக்கு அவர் எடுத்துச் செல்லப்பட்டார். தீவிர சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. உடம்பிலிருந்து இரத்தம் வெளியேறிக் கொண்டே இருந்தது. கை கால்கள் முறிந்த நிலையில் பலவகை சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. ஓய்வின்றி மருத்துவர்கள் சிகிச்சை அளித்தனர். நான்கைந்து தினங்கள் தீவிர சிகிச்சையளித்தும் குணம் பெறவில்லை.

எக்ஸ்-ரே எடுத்துப் பார்த்ததில் கை கால்களில் எலும்பு முறிவுகள் ஏற்பட்டிருந்தது தெரிந்தது. எனவே பெரிய ஆபரேசன் செய்துதான் குணப்படுத்த முடியும் என்றும், அதற்கான கருவிகள் பழனி மருத்துவமனையில் இல்லாததால் உடனடியாக மதுரை அரசினர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுமாறும் டாக்டர்கள் கூறிவிட்டார்கள்.

தம்பியின் நிலைமை இப்படியாகிவிட்டதே என்று பேராசிரியர் கண்ணன் மனம் இடிந்து போனார். இந்நிலையில் அவருடன் பணியாற்றிய பேராசிரியர் கஜேந்திரன் அவர்களுக்குச் சென்ற சித்திரா பௌர்ணமி விழாவில் வாங்கிய கலசம் நினைவிற்கு வந்தது.

1993ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி மேல்மருவத்தூரில் சித்திரா பௌர்ணமி விழாவையொட்டி வேள்விப் பூசை நடைபெற்றது.

அந்த வேள்வியில் புத்தம்புதிய முறையில் யாக குண்டங்களும், சக்கரங்களும் அமைக்கப்பட்டன. மருத்துவத் தொழில் சார்ந்த பலரையும் அந்த வேள்வியில் பங்குபெறுமாறு அன்னை கூறியிருந்தாள்.

அந்த விழாவில் கலந்து கொண்டு சக்தி கஜேந்திரன் கலசம் ஒன்று வாங்கி வந்திருந்தார். வீட்டிற்குச் சென்று அந்தக் கலசத் தீர்த்தத்தையும், உயிர்ப்பு நூலையும் எடுத்து வந்தார்.

மயங்கிக் கிடந்த சேகரைக் காரில் ஏற்றிக் கொண்டு பழனியிலிருந்து மதுரைக்குப் புறப்பட்டனர். அவர் கையிலும் கால்களிலும் உயிர்ப்பு நூல் கட்டப்பட்டது. வழிநெடுக இடையிடையே கலச தீர்த்தம் ஊட்டப்பட்டது.

மதுரை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சேகருக்குத் தீவிர சிகிச்சைகள் தொடங்கின. அறுவை சிகிச்சைக்கு ஆயத்தமானார்கள்.

இதில் ஓர் அதிசயம் என்னவென்றால் உயிர்ப்பு நூல் கட்டப்பட்ட பிறகு வீங்கியிருந்த கைகால்களின் வீக்கம் குறைந்தது. கலச தீர்த்தம் உள்ளே சென்றதும் ஒரே நாளில் ஒரு சில மாற்றங்கள் ஏற்பட்டன. மருத்துவமனையில் அறுவை சிகிச்சை தொடங்கியது. அதற்கு முன் சேகரின் ஆடைகள் அகற்றப்பட்டன. அறுவை சிகிச்சைக்கு என்றே தனியாக ஆடை அணிவிப்பார்கள். கை கால்களில் கட்டப்பட்ட உயிர்ப்பு நூல்களை நர்சுகள் அவிழ்க்க முனைந்தனர். அவை இருந்து விட்டுப் போகட்டும் என்று டாக்டர்கள் கூறினர்.

(தொடர்ச்சி..7ஆம் பக்கம்)

ஆன்மிககுரு

அருள்திரு அடிகளார் அருளிய

# குரு உபதேசங்கள்



## விஞ்ஞானத்துறையில் பரிசோதனை நடத்துவது போல..

“வான வெளியில் என்னென்ன இருக்கின்றன என்பதை ஆராய்ந்து பார்க்கக் கோடி கோடியாய்ச் செலவு செய்கிறான். விண்வெளிக் கப்பல் விடுகிறான். உடைந்தாலும் கவலைப்படாமல் முயற்சி செய்கிறான்.

ஆன்மிகத்திலும் சில இலட்சங்களைச் செலவழித்து நாம் சோதனை நடத்துகிறோம். வேள்வி செய்ய வைக்கிறோம். நாடு வளம்பெற முயற்சி செய்கிறோம். மழையை வரவழைத்துக் காட்டியும் இருக்கிறோம். வேள்வி மூலமாக நாம் இயற்கையை வேண்டுகிறோம்.”

## உயிரைக் காத்த...

அறுவை சிகிச்சைக்கு முன்பாக எக்ஸ்-ரே எடுக்கப்பட்டது. எக்ஸ்-ரே படங்களைப் பார்த்த டாக்டர்கள் அதிசயப்பட்டு விட்டனர்.

“பெரிய அளவில் ஆபரேசன் செய்ய வேண்டியிருக்கும் என்றுதான் எதிர்பார்த்தோம். அதற்கு அவசியமில்லாத நிலையிலே எலும்புகளிலும் தசைகளிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மாதக் கணக்கில் வைத்து சிகிச்சை அளிக்க வேண்டிய கேஸ் இது” என்றனர்.

ஒரு வார காலம் மயக்க நிலையில் கிடந்த சேகருக்குக் கலச தீர்த்தம்தான் புகட்டப்பட்டது.

‘எந்த மருந்தையும் உட்கொள்ளாமலும் எந்த மருந்தையும் உடல்மேல் தடவாமலும், ஒரு வார காலத்தில் இவரது உடம்பு தேறி வருகிறது என்றால் ஆச்சரியமாக இருக்கிறது. ஏதோவொரு தெய்வ சக்தியின் துணை என்பதைத் தவிர வேறு எதுவும் சொல்வதற்கில்லை’ என்றார்கள் டாக்டர்கள்.

அங்கிருந்த நம் பக்தர்கள் சித்திரா பௌர்ணமி வேள்வி பற்றியும் கலச தீர்த்தத்தின் மகிமை பற்றியும் உயிர்ப்பு நூல் பற்றியும் கூறினார்கள்.

“நீங்கள் கொடுத்த கலச தீர்த்தம் உடல் புண்களை ஆற்றி வந்துள்ளது. உயிர்ப்பு நூல் என்ற நாண்தான் துண்டுபட்ட எலும்புகளை இணைய வைத்திருக்கிறது. எங்கள் வேலையை அன்னை குறைத்துவிட்டாள்.

மாதக்கணக்கில் படுக்கையில் கிடத்தி ஆயிரக்கணக்கில் செலவிட்டாலும் உத்தரவாதம் கொடுக்க முடியாத கேஸ் இது. எப்படியோ தெய்வ சக்தியால் இந்த ஆள் காப்பாற்றப்பட்டு இருக்கிறார்” என்றார்கள் டாக்டர்கள்.

அன்னையை தெய்வ சக்தியை உணரத் தொடங்கிய சேகர், இப்போது நல்லபடியாக ஒரு தொழில் செய்து கொண்டிருக்கிறார். அன்னையையும் அடிகளாரையும் போற்றி வணங்கி வருகிறார்.

சக்திகளே! வேள்விக் கலச தீர்த்தம் நமக்கெல்லாம் சமய சஞ்சீவி! நம் குடும்பங்களில் யாருக்காவது உயிர் ஆபத்து வரும்போது அன்னையை வேண்டிக்கலசம் தீர்த்தம் ஊட்டிய பிறகே மருத்துவ சிகிச்சையளிப்பது சிறப்பு! எனவே சித்தர் பீடத்தில் நடைபெறும் விழாக்கள், ஆன்மிக மாநாடுகளின்போது நடைபெறும் வேள்விப் பூசைகளின் கலசத்தை வாங்கி ஒவ்வொருவர் வீட்டிலும் வைத்துப் பூசை செய்து கொண்டு வருவது நல்லது!

கலச விளக்கிற்கு விலை வைப்பது உன் பாவ மூட்டை தொலைய! – என்பது அன்னையின் அருள்வாக்கு.

கலச தீர்த்தம் காப்பாற்றாது போனால்.. நமது ஊழ்வினை முடிச்சு அவ்வளவு வலிமையானது என்று புரிந்து கொண்டு ஆறுதல் அடைவதைத் தவிர வேறு வழியில்லை. அன்னையை நொந்து கொள்வதிலும் பயனில்லை.

ஒருபுறம் ஊழ்வினையின் வலிமையையும் அன்னை புரிய வைக்கிறாள். இன்னொரு புறம் கலச தீர்த்தத்தின் மகிமையையும் புரிய வைக்கிறாள்.

ஓம் சக்தி அம்மாவே சரணம் அம்மா!

# Sydney - Mandrams - Upcoming Events – March 2018



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**
Contact: 02-96420519, 0439686452



**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School
Moree Street – Westmead

| | | | |
|---|---|---|---|
| 01.03.2018 | THURSDAY – வியாழன் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |



**ஆன்மிககுரு அருள்திரு அடிகளார் அவர்களின்**

78ஆவது

## அவதாரத் திருநாள் பெருவிழா

**02.03.2018 - 7.30 மணி**

**Westmead Public School, Hawkesbury Road, - Westmead**

பாதபூஜை-கூட்டு வழிபாடு-Joint Prayer

| | | | |
|---|---|---|---|
| 09.03.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 16.03.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 23.03.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 30.03.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 31.03.2018 | SATURDAY – சனி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**மாசி – அமாவாசை–பௌர்ணமி :**
துன்பம் அகலும். செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கி தூய்மை அடையலாம்.
அதன்பிறகு மனமறிந்து எந்த பாவத்திலும் ஈடுபடாமல் இருக்கத் தோன்றும்.

**பங்குனி - அமாவாசை–பௌர்ணமி:**
தரும சிந்தனையை உண்டுபண்ணும்.
உலகில் எங்கும் சமாதானமும், செழிப்பும், தர்ம நெறிகளும் தழைத்து உலக நலம் உண்டாகும்.

***உன் ஆன்மா வாழ்த்தும்***

“உன்னிடம் தூய பக்தியும், ஆத்மார்த்தமான தொண்டும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் உன்னைப் பிறர் மதிக்காவிட்டாலும் உன் ஆன்மா உன்னை வாழ்த்தும்.”

-அன்னையின் அருள்வாக்கு

# Divine Miracles at Melmaruvathur

## There is no rebirth after seeing the jyothi:

Sakthi Rameswaran and Sakthi Saroja were devotees of Mother living in Athur adjacent to Chenglepet. Both of them had come to Maruvathur to participate in the Adi Pooram festival that was being celebrated with great fervor in 1978. That night a drama was being enacted and the couple was watching it with interest. There was a neem tree nearby. Suddenly a light emanated from the tree and went back into the tree again. This was seen by Sakthi Saroja but no one else was a witness to this.

Saroja asked Mother about this during divine revelations. Mother said, "It was I who showed you that light. Since you have seen it, you will not be reborn". One day Saroja was asleep at home since she was very tired. Suddenly she heard the laughter of on small girl. She woke up. She saw a girl of around ten laughing and coming towards her. Then the girl vanished. A few days later Saroja asked Mother about it. Mother said, "It was I who had come to you as a small girl".

One day Rameswaran became ill and was bed ridden. Whatever medicines were given did not help and Saroja approached Mother. Mother told her, "Daughter, take him to a hospital and get him attention. I shall be with him and protect him". Accordingly he was admitted to the hospital Chenglepet where tests were done. It turned out that he was suffering from Typhoid complicated by Pneumonia. He was told that it would take about 21 days to be cured. He was asked to rest at home and take the prescribed medicines. When the fever increased the next day, Saroja was anxious and she sat at the foot of her husband and was crying. Adhi Parasakthi who is capable of running the whole universe from where she is, Herself came to Saroja's house, which was only an ordinary tiled house. After all She was an incarnation who has appeared on this world to raise women to spiritual heights. She entered the house and stood next to the cot where Rameswaran was lying. She took Her three fingers near Rameswaran's forehead and gradually moved them towards his feet. Holy ash flowed out of Mother's fingers. Saroja sat frozen to the spot without being able to even shout Mother's name. Before Saroja could follow Mother's movement from her husband's head to foot. Mother vanished. Her husband was sweating profusely but his temperature had come down a little. The next day he was much improved and on the third he was perfectly well.

Oneday Saroja had a dream in which she saw the weekly worship centre of Arthur. She saw Mother's picture and also Atharvana Badhra Kali was lying next to it. In the dream Kali asked Saroja for a piece of jaggery. Why did she have such a dream? What was the significance of Kali asking for jaggery? Saroja asked Mother about this during a revelation. Mother said, "Daughter, Kali does not go to any one nor does she ask them for any thing. If she has asked you for something it is because of the merit you have earned in the past life. You will benefit by Her in the future".

One night in a dream Saroja saw Adigalar standing at the Worship Centre at Athur. There was a lump of camphor in his hand, which he lit in front of Mother's picture. As soon as the camphor was lit she saw the Pranava Om coming out of the picture giving out light. The Athur Worship Centre was celebrating its first anniversary and wanted to bring out a special issue of their magazine. In that Saroja was asked to write about her experiences under the title. "the Sakthi I saw". The above are excerpts from that article.

***

## ஆன்மாவே வழிநடத்தும்

"பறவைகளும், மிருகங்களும் தங்களுக்கு அழிவு வருகிறது என்பதை உணர்ந்ததும், தாங்கள் இருந்த இடத்தை விட்டு வேறு இடங்களுக்குச் சென்று பாதுகாத்துக் கொள்ளும். அதுபோல் உங்கள் ஆன்மா சுத்தமாக இருந்தால் நல்லது, கெட்டது சொல்லி உங்களை வழி நடத்திச் செல்லும்".

- அன்னையின் அருள்வாக்கு

# Melbourne - Mandrams – Upcoming Events – March 2018

## Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)

Contact: +61 451 374 878, +61 433 326 620

contactus@supremesakthi.com
www.supremesakthi.com

**Joint Prayers:** Once a month
**Thiruvilakku Poojai:** Every month on the Sunday following the Full Moon day

**Southern Community Centre,**
Rupert Drive - Mulgrave 3170
(Mel.Ref:: 80 F 5)

| | | | |
|---|---|---|---|
| **04.03.2018** | **Sunday** | **09.00a.m.**<br>**03.00p.m.** | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing<br>**"Thiru Vilakku Pooja"**<br>**"திருவிளக்குப் பூஜை"** |
| **01.04.2018** | **Sunday** | **09.00a.m.**<br>**03.00p.m.** | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing<br>**"Thiru Vilakku Pooja"**<br>**"திருவிளக்குப் பூஜை"** |



# திருமதி அம்மா பதில்கள்

**- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்**

*தீயவர்களுக்கு ஞானத்தைப் போதிக்காதே எனக் கூறப்படுவது நியாயமா அம்மா..?*

தீயவர்களுக்கு ஞானத்தைப் போதிக்கக் கூடாது என்று கூறுவது தவறு. நல்லதைச் சொல்லுகிறோம். எடுத்துக் கொள்வதும், எடுத்துக் கொள்ளாததும் அவர்கள் விருப்பம். அதற்காக நல்லதைச் சொல்லாமல் இருக்கக்கூடாது. அம்மாவே "நூறு பேரில் ஒருவன் திருந்தினால் கூடப் போதும்" என்றுதானே கூறுகிறார்கள். ஞானத்தைப் போதிக்கும்போது இடம், பொருள், ஏவல் இவற்றையும் தெரிந்து நடந்து கொள்ள வேண்டும். ஆழம் தெரியாமல் காலை விட்டு அவதிப்படக் கூடாது.

*அம்மா! ஆன்மிகத்தில் எளியவர்களுக்குச் செய்யும் தொண்டு ஏன் முக்கியமானதாகக் கருதப்படுகிறது? இந்தத் தொண்டு உணர்வு இல்லாமல் செய்யும் பூசையும், விரதமும் பலன் தருமா?*

'மக்கள் தொண்டே, மகேசன் தொண்டு' என்பார்கள். இருப்பவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுப்பதுதான், தானம், தர்மம், நீதி, பூசை, விரதம் என்ற வழிபாட்டு முறைகள் வேறு. தொண்டு மனப்பான்மை வேறு. பூசை, விரதம் அவரவர்களுக்குப் பயனளிக்கும். தொண்டு பிறருக்குப் பயனளிக்கும். குழப்பிக் கொள்ளாமல், வழிபாட்டோடு, தொண்டு தர்மத்தையும் சேர்த்துச் செய்யுங்கள்.பலனைக் கட்டாயம் அம்மா கொடுப்பார்கள்.

## Melbourne - Mandrams – Upcoming Events – March 2018



# Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.

**Vermont South Community House,**

Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 01.03.2018 | THURSDAY – வியாழன் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>“பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 02.03.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

**03.03.2017**
**சனி**
இரவு 7.00 மணி

**ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களின்**
**78ஆவது**
**அவதாரத்திருநாள் பெருவிழா**

| | | | |
|---|---|---|---|
| 09.03.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 16.03.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 23.03.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 30.03.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 31.03.2018 | SATURDAY – சனி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>“பௌர்ணமி விளக்குப் பூஜை” |

### Lalor

**Join Prayers: Once a month - Sunday 4.00p.m. – 6.00p.m.**

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## அடிகளாரைப் பற்றிக்கொள்:

“ஆன்மிகத்தை விடாமல் பற்றிக்கொள்! சரணாகதித் தத்துவத்தைக் கடைப்பிடி! அடிகளாரைப் பற்றிக்கொள்!

அடிகளார் காலத்தில் வாழ்கிறோம், அவன் அருள் உரைகளைக் கேட்கிறோம் என்று பெருமைப்படு!

அடிகளாருக்குத் தொண்டு! அடிகளார் பார்வை படுதல்! ஆகியவற்றின் பெருமைகளைப் பின்னர் நீ அறிவாய்!”
*அன்னையின் அருள்வாக்கு*

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!



## ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

## ஆலய சிறப்பு விழாக்கள்

## 2018 - ஸ்ரீ ஹேவிளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| மாசி | 17 | 01.03.2018 | வியாழன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மாசி | 19 | 03.03.2018 | சனி |  ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களின் 78ஆவது அவதாரப் பெருமங்கள விழா |
| பங்குனி | 03 | 17.03.2018 | சனி | அமாவாசை - வேள்வி |
| பங்குனி | 04 | 18.03.2018 | ஞாயிறு | தெலுங்கு வருடப்பிறப்பு |
| பங்குனி | 17 | 31.03.2018 | சனி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| சித்திரை | 01 | 14.04.2018 | சனி | தமிழ்ப் புத்தாண்டு |
| சித்திரை | 02 | 15.04.2018 | ஞாயிறு | அமாவாசை - வேள்வி |
| சித்திரை | 16 | 29.04.2018 | ஞாயிறு | சித்திரைப்பௌர்ணமி – வேள்வி பெருவிழா |
| வைகாசி | 01 | 15.05.2018 | செவ்வாய் | அமாவாசை - வேள்வி |
| வைகாசி | 15 | 29.05.2018 | செவ்வாய் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| வைகாசி | 30 | 13.06.2018 | புதன் | அமாவாசை - வேள்வி |
| ஆனி | 13 | 27.06.2018 | புதன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆனி | 28 | 12.07.2018 | வியாழன் | அமாவாசை - வேள்வி |
| ஆடி | 11 | 27.07.2018 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆடி | 26 | 11.08.2018 | சனி | அமாவாசை - வேள்வி |
| ஆடி | 27 | 12.08.2018 | ஞாயிறு | சித்தர்பீடத்தில் 47ஆவது ஆடிப்பூர பெருவிழா |
| ஆடி | 28 | 13.08.2018 | திங்கள் | சித்தர்பீடத்தில் 47ஆவது ஆடிப்பூர பெருவிழா |
| ஆவணி | 10 | 26.08.2018 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆவணி | 25 | 09.09.2018 | ஞாயிறு | அமாவாசை - வேள்வி |
| புரட்டாசி | 08 | 24.09.2018 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| புரட்டாசி | 22 | 08.10.2018 | திங்கள் | அமாவாசை - வேள்வி |

### ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

சக்தி ஒளி

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

| தனி இதழ் | ஆண்டுச்சந்தா | ஆயுள் சந்தா | வெளிநாட்டுச் சந்தா |
|---|---|---|---|
| ரூபா ₹ 15.00 | ரூபா ₹ 180.00 (இந்தியா) | ரூபா ₹ 2600.00 (இந்தியா) | இந்திய ரூபா ₹ 3500.00 (இரண்டு ஆண்டுகள்) |

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **"ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை"** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address: Editor,'Sakthi Oli' Office, Adhiparasakthi Sithar Peetam, Melmaruvathur 603319, Tamil Nadu, South India.

# கலச தீர்த்தம் ஊற்றியதும், காவிரி பெருக்கெடுத்ததும்...

சக்தி பச்சையப்பன் என்பவர் குருங்குளம் ஆலை ஒன்றில் பணியாற்றி வந்தவர். தன் சொந்த வேலை நிமித்தமாக மேட்டூர் செல்ல இருந்தார்.

அவரிடம் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத் தலைவர் சக்தி ஆர். ஜெயராமன், தங்கள் மன்றத்திலிருந்த கலசத் தீர்த்தத்தையும், மேல்மருவத்தூரில் அன்னைக்குச் செய்த அபிடேகத் தீர்த்தத்தையும் ஒரு பாட்டில் நிறைய ஊற்றிக் கொடுத்து, இதை 32 அடி தண்ணீர் மட்டுமே உள்ள அந்த மேட்டூர் அணையில் மூலமந்திரம் சொல்லி ஊற்று! மற்றதெல்லாம் அம்மா பார்த்துக் கொள்ளும்!" எனச் சொல்லி அனுப்பியிருந்தார்.

காவிரி நீரைத் திறந்துவிடுவது பற்றிக் கர்நாடக அரசுக்கும், தமிழக அரசுக்கும் தகராறு ஏற்பட்ட சூழ்நிலை அது!

**சக்தி. அமரானந்தம்** - தஞ்சாவூர்

தஞ்சை மாவட்டத்தில் இலட்சக்கணக்கான ஏக்கர் குறுவைப் பயிர் வாடுகிறது என்று தமிழக அரசு மன்றாடிய நேரம் அது!

இவர்கள் எப்போது பேசி எப்போது முடிவெடுப்பது? அதுவரை நாளுக்கு நாள் பயிர்களெல்லாம் வாடுகிறதே! என்று தஞ்சை மாவட்ட விவசாயிகளெல்லாம் கைபிசைந்து கலங்கிய நேரம் அது!

இந்த நிலையில்தான் ஏதோ நம்மால் ஆன சிறிய முயற்சியைச் செய்து பார்ப்போம் என்றெண்ணிய தொண்டர் சக்தி ஜெயராமன் திரு.பச்சையப்பன் அவர்களிடம் கலசத் தீர்த்தத்தைக் கொடுத்து, அன்னையை வேண்டிக்கொண்டு மேட்டூர் அணையில் ஊற்றும்படி அனுப்பி வைத்தார். அவ்வாறே அவரும் செய்தார்.

இன்னொரு புறம் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த செவ்வாடைத் தொண்டர்கள் கலசத் தீர்த்தத்தை எடுத்துச் மேட்டூர் அணையில் அன்னையை வேண்டிக்கொண்டு ஊற்றினர்.

இது நடந்தது 1999 ஜுன் மாதம்!

தன் தொண்டர்களின் பொதுநல உணர்வை மெச்சி அன்னை ஆதிபராசக்தி, அதன் பிறகு மழை கொடுத்தாள். காவிரியிலே நீர் வரத்து அதிகமாயிற்று. பருவமழை பொய்க்காமல் பொழிய ஆரம்பித்தது.

மழை வந்ததும் காவிரியில் நீர் பெருகியதும் மேட்டூர் அணை நிரம்பியதும் செவ்வாடைத் தொண்டர்களின் வேண்டுதலால் என்பது உலகிற்குத் தெரியாது.

காவிரிப் பிரச்சனை – தமிழக விவசாயிகள் பிரச்சனை - இன்று வரை இழுபறியாக இருப்பதை நாடே அறியும்.

இந்நிலையில் ஆன்மிககுரு அருள்திரு அடிகளாா் அவர்களின் ஆசியாலும், ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத்தாலும் மட்டுமே அவ்வப்போது தண்ணீர்ப்பிரச்சனை தீர்க்கப்பட்டு வருகிறது என்பது உண்மை!

ஓம் சக்தி!


**புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்**



ஆன்மிக விடைதேடும்
அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த
**ஆதிபராசக்தி இணையத்தளம்**
**www.adhiparasakthi.co.uk**

**"ஜோதி" ஆன்மிகச் செய்திச் சுடரை**
**www.adhiparasakthi.co.uk** என்ற
**இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.**

# குடும்பநல வேள்வியில் கிடைத்த அனுபவம்

விழுப்புரம் வட்டத்தில் நன்நாடு என்ற கிராமம். அங்கே சேகர் என்பவரின் வீட்டில் நிம்மதி இல்லாமலும் உறக்கம் இல்லாமலும் அல்லல்பட்டார்கள். இரவில் வீட்டை விட்டுத் தெருவில் வந்து படுத்து உறங்குவார்கள்.

அம்மா அருளிய முறைப்படி நடத்தப்படும் குடும்பநல வேள்வி பற்றிக் கேள்விப்பட்டுத் தங்கள் வீட்டிலும் குடும்பநல வேள்வி செய்து தரும்படிக் கேட்டார்கள்.

எங்கள் தாலுக்கா வேள்விக் குழுவினரோடு நானும் அந்த வேள்வியில் பணி செய்யப் போனேன்.

வேள்விக்கு முன்பாகச் சுற்று பூஜை போடுவது வழக்கம். அவ்வாறு சுற்று பூஜை போடும்போது, கற்பூரத்தட்டை யாரோ தட்டி விட்டது போல இருந்தது. கற்பூரத்தட்டு கீழே விழுந்தது. தரையில் கற்பூரத் துண்டுகள் சிதறி எரிந்து கொண்டிருந்தன.

ஆரம்பத்திலேயே இப்படித் தடங்கல் வருகிறதே ஏன்? என்று அங்கிருந்த சிலரை விசாரித்தேன். அந்த வீட்டில் பாட்டி ஒருவர் வீட்டின் பின்புறத்தில் தூக்குப் போட்டுக் கொண்டு இறந்து விட்டார் எனக் கேள்விப்பட்டேன்.

அந்தப் பாட்டி இறந்து ஒரு மாதத்தில் அந்த வீட்டில் இருந்த ஒன்பது வயதுப் பேரன் டி.வி. கேபிள் வயரில் கை வைத்து ஷாக் அடித்து இறந்துவிட்டான் என்றும் கேள்விப்பட்டேன்.

எனவே அம்மா சொல்லிய முறைப்படி எச்சரிக்கையாகத் திருஷ்டி கழித்தோம்.

வேள்வி முடிந்து, அந்தப் பாட்டி தூக்குப் போட்டுக்கொண்ட அந்த வேப்ப மரத்தின் அடியில் திருஷ்டி கழிக்கச் சென்றபோது… என்ன ஆச்சரியம்..!

அங்கே ஒரு வயதான பாட்டி கால் நீட்டியவாறு அமர்ந்திருந்த காட்சி கண்டேன். என் கால் தவறுதலாக அவர் கால் மீது பட்டு விட்டதால் தொட்டுக் கும்பிடக் குனிந்தபோது பாட்டியின் உருவம் மறைந்துவிட்டது. அது கண்ட எனக்கு வேர்த்து விறுவிறுத்து விட்டது. மயக்கம் வந்தது.

சிறிது நேரம் கழித்து எனக்கு நினைவு வந்தது.

குடும்பநல வேள்வி செய்த பிறகு அந்த வீட்டார் இப்போது நிம்மதியாக இருக்கிறார்கள்.

ஓம் சக்தி!

## ஆன்மாவை எச்சரிக்கையாகப் பார்த்துக்கொள்!

**“சிரித்தாலும் அழிவு உண்டு. சிரிக்காவிட்டாலும் அழிவு உண்டு. ஆன்மாவை எச்சரிக்கையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.”**

## உன் ஆன்மா வாழ்த்தும்

**“உன்னிடம் தூய பக்தியும், ஆத்மார்த்தமான தொண்டும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் உன்னைப் பிறர் மதிக்காவிட்டாலும் உன் ஆன்மா உன்னை வாழ்த்தும்.”**

## ஆன்மா

**“உடலுக்கு வேலை கொடுப்பதும் ஆன்மாதான். ஆசையை உற்பத்தி செய்வதும் ஆன்மாதான்.”**

அன்னையின் அருள்வாக்கு

# Melbourne - Mandrams – Upcoming Events – March 2018

## Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram

## மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்

(Reg. No. 2193)

விக்டோரியா – அவுஸ்திரேலியா

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com
Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

**கூட்டு வழிபாடுகள்:**

**Clarinda – வெள்ளி - Friday:**

**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**

**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Clarinda - 02.03.2018 | Friday | தை | 20 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |




| | | | | |
|---|---|---|---|---|
| Clarinda - 09.03.2018 | Friday | மாசி | 25 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 11.03.2018 | Sunday | மாசி | 27 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 16.03.2018 | Friday | பங்குனி | 02 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 18.03.2018 | Sunday | பங்குனி | 04 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 23.03.2018 | Friday | பங்குனி | 09 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 25.03.2018 | Sunday | பங்குனி | 11 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 30.03.2018 | Friday | பங்குனி | 16 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |

**01.03.2018 – வியாழன்-பௌர்ணமி, 17.03.2018 – சனி - அமாவாசை, 31.03.2018 – சனி- பௌர்ணமி**

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

## 2018

| | | | | |
|---|---|---|---|---|
| 01.03.2018 | வியாழன் | மாசி | 17 | **மாசி மகம் - தேர் - முத்துமாரியம்மன் -மாத்தளை- இலங்கை**<br>**தீர்த்தோற்சவம்**<br>**- குன்றத்துக்குமரன் ஆலயம் - ரொக்பேங்க் - மெல்போர்ண்**<br>**பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 02.03.2018 | வெள்ளி | மாசி | 18 | **பூங்காவனம்** |
| 03.03.2018 | சனி | மாசி | 19 | **ஆன்மிககுரு அருள்திரு அடிகளார் - அவதாரத் திருநாள்** |
| 04.03.2018 | ஞாயிறு | மாசி | 20 | சங்கடஹர சதுர்த்தி –<br>**திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 05.03.2018 | திங்கள் | மாசி | 21 | சங்கடஹர சதுர்த்தி (EST) |
| 13.03.2018 | செவ்வாய் | மாசி | 29 | ஏகாதசி விரதம் |
| 14.03.2018 | புதன் | மாசி | 30 | பிரதோஷ விரதம் - காரடையான் நோன்பு |
| 15.03.2018 | வியாழன் | பங்குனி | 01 | பிரதோஷ விரதம் (EST) |
| 16.03.2018 | வெள்ளி | பங்குனி | 02 | போதாயன அமாவாசை |
| 17.03.2018 | சனி | பங்குனி | 03 | **அமாவாசை விரதம் - வேள்வி** – **மேல்மருவத்தூர்** |
| 19.03.2018 | திங்கள் | பங்குனி | 01 | பங்குனி திங்கள் -1 |
| 21.03.2018 | புதன் | பங்குனி | 07 | சதுர்த்தி விரதம்<br>**ஸ்ரீ சிவா பிரமோற்சவம்**<br>- ஸ்ரீ சிவா-விஷ்ணு ஆலயம் - கரம்டவுண்ஸ் - மெல்போர்ண்<br>**கொடியேற்றம்** - முருகன் கோயில் – சிட்னி |
| 22.03.2018 | வியாழன் | பங்குனி | 08 | கார்த்திகை விரதம் - ஷஷ்டி விரதம் |
| 23.03.2018 | வெள்ளி | பங்குனி | 09 | ஷஷ்டி விரதம் - (EST) |
| 24.03.2018 | சனி | பங்குனி | 10 | மஹாஷ்டமி |
| 26.03.2018 | திங்கள் | பங்குனி | 12 | பங்குனி திங்கள் -2 |
| 27.03.2018 | செவ்வாய் | பங்குனி | 13 | ஏகாதசி விரதம் |
| 29.03.2018 | வியாழன் | பங்குனி | 15 | பிரதோஷ விரதம் (EST)<br>**இரதோற்சவம்**<br>- ஸ்ரீ சிவா - விஷ்ணு ஆலயம் - கரம்டவுண்ஸ் - மெல்போர்ண்<br>**தேர்த்திருவிழா** - முருகன் கோயில் – சிட்னி |
| 30.03.2018 | வெள்ளி | பங்குனி | 16 | பங்குனி உத்தரம் |
| 31.03.2018 | சனி | பங்குனி | 17 | **பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 01.04.2018 | ஞாயிறு | பங்குனி | 18 | **திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 02.04.2018 | திங்கள் | பங்குனி | 19 | பங்குனி திங்கள் -3 |
| 04.04.2018 | புதன் | பங்குனி | 21 | சதுர்த்தி |
| 09.04.2018 | திங்கள் | பங்குனி | 19 | பங்குனி திங்கள் -4 |
| 12.04.2018 | வியாழன் | பங்குனி | 29 | ஏகாதசி விரதம் |
| 13.04.2018 | வெள்ளி | பங்குனி | 30 | பிரதோஷ விரதம் (EST) |
| 14.04.2018 | சனி | சித்திரை | 01 | ஸ்ரீ விளம்பி- தமிழ் சித்திரை வருடப்பிறப்பு |